10th September 1958]

The Hon. Sri M. BHAKTAVATSALAM : போலீஸ் ஸ்டேஷன்கள் ஜனத்தொகையின் அளவுக்கு வைக்க முடியாது. குற்றம் செய்கிறவர்கள் எங்கும் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களை அடிக்கடி தடுக்க கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

Sri N. R. THIAGARAJAN : அவர்களை விரட்டிப் பிடித்தால் அதனால் எதாவது விபரீத விளைவுகள் நேரிட்டு, அதன்காரணமாக இந்தச் சபையில் ஒத்திவைப்புப் பிரேரணையும், இதர நடவடிக்கைகளும் தங்கள் பேரில் எடுக்கப்பட்டு விடுமோ என்று பயந்து கொண்டுதான் போலீஸ்காரர்கள் அவர்களை விரட்டிப் பிடிக்காமல் விட்டுவிட்டார்கள் என்று மக்கள் பேசிக் கொள்வது சர்க்காருக்குத் தெரியுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : போலீசாருக்கு அம்மாதிரி பயம் ஏற்படலாம். அது சாக்காக ஆகாது. அவர்கள் ஜாக்கிரதையுடன் நடந்து கொள்ளத்தான்வேண்டும்.

Salt.

*** 75-H. *Q.*—Sri A. VEDARATHNAM :** கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) மத்திய அரசாங்கத்திலிருந்து உப்பை நிறுத்து விற்க வேண்டுமென்று எதேனும் நம் மாநில சர்க்காருக்கு அறிவிப்பு வந்திருக்கிறதா ?

(ஆ) அப்படியானால், அதன் விபரம் என்ன ?

(இ) அரசாங்கம் இதுபற்றி என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது ?

(ஈ) உப்பை நிறுத்து விற்பது சம்பந்தமாய் நம் மாநில சர்க்கார் சட்டம் இயற்றியது எப்போது ?

(உ) அதை எந்த அளவுக்கு அமுலுக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள் ?

(ஊ) இவ்வளவு கால தாமதத்திற்கு காரணம் என்ன ?

(எ) இவ்வுத்தரவை அமுலுக்குக் கொண்டு வராததால் உப்பின் தரத்தை உயர்த்தத் தடையா யிருப்பது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதா ?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) The Government of India stated that good quality salt was heavier than inferior quality salt and therefore gave smaller number of measures for the same weight. They added that this encouraged the sale of inferior quality salt frustrating their efforts in the direction of production of good quality salt and requested this Government to introduce the sale of salt by weight.

(*c*) & (*d*) The Government propose to enforce, as an experimental measure, the sale of salt by weight in the Madras City under Section 5 (A) of the Madras Weights and Measures Act, 1948, as amended by Madras Act XXXVI of 1951 and issued a notification in December 1952.

(*e*) The Government did not enforce the notification relating to sale of salt by weight.

(*f*) The Government subsequently considered that there was no particular urgency to enforce the notification and that the enforcement might come into effect along with the change over to Metric system of weights and measures contemplated by the Government of India.

(*g*) Yes, Sir [please refer to answer to clause (*b*) of the question].

[10th September 1958

SRI A. VEDARATHNAM : அரசாங்கம் கொண்டுவர இருக்கிற இந்த மெட்ரிக் முறை எப்போது அமுலுக்கு வரும் ? உப்பின் தரம் உயர்வதற்கு வழி இல்லாமல் போகாதபடிக்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்திருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : அக்டோபர் மாதத்தில் நான்கு ஜில்லாக்களில் அமுலுக்கு வரும். இந்த உப்பு நல்ல க்வாலிடியா இல்லேயா என்பதை நிறையின் மூலம் கண்டு கொள்ளலாம். இதில் 96 சதவிகிதம் சோடியம் க்ளோரேட் இருந்தால் நல்ல உப்பு. அதை ஜனங்கள் பார்த்து வாங்குவதன் மூலம் அறிந்து கொள்ள முடியும்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, this question has been hanging fire for the past so many years and the Government of India have been sending constant reminders to the State Government but in spite of that, the Government have not enforced the system of sale of salt by weight, when other articles like tamarind and chillies are sold by weight. What objections could there be for the Government to adopt the system of sale of salt by weight, inasmuch as it is sure to improve the quality of salt and the consumers also stand to gain by it?

THE HON. SRI R. VENKATARAMAN : The Government have absolutely no objection but they are faced with a lot of difficulties in enforcing the sale of certain things by weight. For one thing, it is customary throughout the whole of this State to buy salt by measures, and to change over suddenly is rather difficult.

SRI S. M. ANNAMALAI : கனம் அமைச்சர் அவர்கள் நான்கு ஜில்லாக்களில் அமுலுக்கு வரும் என்று சொன்னார்கள். எந்த எந்த ஜில்லாக்களில் அமுலுக்கு வரும் ?

THE HON. SRI R. VENKATARAMAN : மெட்ராஸ், செங்கல்பட்டு, தென்னாற்காடு, வடாற்காடு ஆகிய நான்கு ஜில்லாக்களிலும் அமுலுக்கு வரும்.

SRI S. NAGARAJA MONIGAR : பழைய நாணயத்திற்குப் பதிலாக நயா பைசா கொண்டு வரப்பட்டு பல மாதங்கள் ஆகியும் இன்னும் நயா பைசா சம்பந்தமான குழப்பம் மக்களுடைய மனதிலிருந்து அகற்றப்படாமலேயே இருந்து வருகிறது.

MR. SPEAKER : The hon. Member may ask a question pertaining to the main question but he is asking about naya paisa.

SRI S. NAGARAJA MONIGAR : படி அளவில் இப்போது உப்பு வாங்குவதில் கஷ்டம் இருப்பதாகப் புகார் எதுவும் இல்லே. இதை மாற்றி மீண்டும் குழப்பத்தைக் கொண்டு வராமல் மக்களுக்குக் கொஞ்சம் அவகாசம் கொடுப்பார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : படி அளவில் உப்பு வாங்குவதால் அதன் தரத்தைத் தெரிந்து கொள்ள முடியவில்லே. நிறுத்தல் அளவில் வாங்கினால் நல்ல உப்பு அதிக கனமாக இருக்கும். அதை யொட்டி இந்தச்சீர்திருத்தம் அவசியம் என்று கருதுகிறோம். அட்மினிஸ்ட்ரேடிவ் ப்ரொஸீசரினால் சிறிது கால தாமதம் ஆகிறது.

SRI S. PAKKIRISAMI PILLAI : கொஞ்ச காலத்திற்கு முன்னால் இருந்த விலேயைவிட இப்போது உப்பின் விலே குறைந்திருக்கிறது. விலே குறைந்திருப்பதற்கு உப்பின் தரக் குறைவு காரணமா அல்லது வேறு ஏதாவது காரணமா என்று அறிய விரும்புகிறேன்.

10th September 1958]

The Hon. Sri R. VENKATARAMAN : தனிக் கேள்வி வேண்டும்.

Sri R. SRINIVASA IYER : கனம் ஜாஸ்தியாக இருக்கிற உப்பின் தரம் உயர்வாக இருக்கிறது என்றார்கள். தூத்துக்குடி உப்பு வெள்ளை வெளேர் என்று படியில் அளக்கும்போதும் குறைவாகவே இருக்கிறது. அது உயர்ந்த தரம் என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : கனம் நண்பர் சொல்வதை விஞ்ஞான ரீதியில் ஒப்புக்கொள்ள முடியாது. 96 சத விகிதம் சோடியம் க்ளோரேட் உள்ள உயர்ந்த ரக உப்பு கனமாகத்தான் இருக்கும்.

Slums

* 75-J *Q*.—Sri S. LAZAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the central grant (i) allotted (ii) actually paid to Madras State Government towards slum clearance in the years 1956–57, 1957–58, 1958–59; and

(*b*) whether the allotted amounts were fully utilized, and if not, the amount surrendered in the respective years?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) & (*b*) Apparently the member refers to the loans and subsidies sanctioned by the Central Government for Slum Clearance Schemes in the State under the Second Five-Year Plan.

No allotment was made by the Central Government for 1956–57. However, the first loan instalment of Rs. 82,750 was sanctioned by the Central Government towards the cost of an approved scheme in that year, and this has been drawn.

An allotment of Rs. 15 lakhs was made by the Central Government for the year 1957–58, out of which loans amounting to Rs. 11·34 lakhs and a subsidy of Rs. 59,750 were drawn, leaving a balance of Rs. 3·06 lakhs.

For 1958–59, an allotment of Rs. 42·50 lakhs that is, a loan of Rs. 25 lakhs and a grant of Rs. 70·50 lakhs, has been made. So far, a loan of Rs. 74,687 has been drawn. The balance of the allotment will be drawn in the course of the year.

Raw Film Factory

* 80 *Q*.—**Sri N. R. THIAGARAJAN** : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

கொடைக்கானலில் கச்சா பிலிம் தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்க மத்திய சர்க்காருக்கு சென்னை சர்க்கார் ஏதாவது சிபாரிசு செய்திருக்கிறார்கள் ?

The Hon. Sri R. VENKATARAMAN : No, Sir.

Sri N. R. THIAGARAJAN : கொடைக்கானலில் வெள்ளையர்கள் காலத்தில் குடியேறியுள்ள ஆயிரக்கணக்கான பேர்கள் இப்போது வேலை இல்லாமல் இருக்கிறார்கள். கச்சா பிலிம் தொழிற்சாலை ஒன்றை நிறுவாவிட்டாலும், வாட்டில் பார்க் மரங்கள் கிடைப்பதால் ரயான் செயற்கைப் பட்டு பாக்டரியையாவது சர்க்கார் ஏற்படுத்துமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : தனியார் துறையில் யாராவது முன்வந்தால் சர்க்கார் எல்லாவிதமான உதவியையும் செய்யும்.